بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علیٰ رسوله الكريم وعلیٰ عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 28

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

12 துல்ஹஜ் 1437 ஹிஜ்ரி கமரி 15 தபூக் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 15 செப்டம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் நபி மட்டுமல்ல. மாறாக, ஒரு வகையில் நபியாகவும் இன்னொரு வகையில் உம்மத்தி [இந்த சமுதாயத்தைச் சார்ந்தவன்] ஆகவும் இருக்கின்றேன். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலும் முழுமையான அருளும் நிரூபிக்கப்படுகின்றது.**

**மனிதத் தன்மையின் அனைத்து முழுமைகளின் தொகுப்பாக இருந்த அத்தகைய ஒரு நபியை பின்பற்றுபவனாக நான் இருக்கின்றேன். அவர்களது ஷரீஅத் முழுமையானதாகவும் நிறைவானதாகவும் இருந்தது. முழு உலகின் சீர்திருத்தத்திற்காகவும் அது இருந்தது. எனவே, முழு உலகத்திற்கும் அவசியமானதாக இருந்த அந்த ஆற்றல்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

மனிதத் தன்மையின் அனைத்து முழுமைகளின் தொகுப்பாக இருந்த அத்தகைய ஒரு நபியை பின்பற்றுபவனாக நான் இருக்கின்றேன். அவர்களது ஷரீஅத் முழுமையானதாகவும் நிறைவானதாகவும் இருந்தது. முழு உலகின் சீர்திருத்தத்திற்காகவும் அது இருந்தது. எனவே, முழு உலகத்திற்கும் அவசியமானதாக இருந்த அந்த ஆற்றல்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. பிறகு எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அந்த இயல்பான ஆற்றல்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற விஷயத்தில் என்ன சந்தேகம் இருக்கின்றது? ஏனென்றால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக வந்திருந்தார்கள். அவர்கள் என்னுடைய இடத்தில் இருந்திருந்தால் தனது அந்த இயல்பின் காரணமாக எந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு இறைவனின் அருள் எனக்கு ஆற்றலை வழங்கியிருக்கின்றதோ அந்தப் பணியை அவர்களால் நிறைவேற்றியிருக்க முடியாது. وهذا تحديث نعمة الله ولا فخر (இது இறைவனின் அருளை எடுத்துரைப்பதாகும். இதில் எனக்கு எந்தப் பெருமையும் இல்லை.)

இதுவும் வெளிப்படையான ஒரு விஷயமாகும். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பகரமாக வந்திருந்தாலும் கூட அந்தப் பணியை அவர்களால் நிறைவேற்றியிருக்க முடியாது. திருக்குர்ஆனுக்கு பகரமாக தவ்ராத் இறங்கியிருந்தால் திருக்குர்ஆன் நிறைவேற்றியிருந்த அந்தப் பணியை ஒருபோதும் அதனால் நிறைவேறியிருக்க முடியாது. மனிதனின் தகுதிகள் திரை மறைவில் இருக்கின்றன. இந்த விஷயத்தில் கோபப்படுவதும் முகத்தை கடுகடுப்பாக வைத்துக் கொள்வதும் நல்லதல்ல. எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றுள்ள அந்த இறைவனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் படைத்திருப்பது போன்றே இன்னொரு மனிதனையோ அல்லது அவர்களை விட சிறந்த மனிதரையோ உருவாக்க முடியாதா?☆ அவ்வாறு முடியாது என்பது திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு வசனத்திலிருந்து நிரூபிக்கப்படுகின்றது என்றால் அந்த வசனத்தை எடுத்துக் காட்ட வேண்டும். திருக்குர்ஆன் வசனங்களை மறுக்கின்ற அந்த நபரே முற்றிலும் மரணித்தவராக இருப்பார். அது அல்லாமல் நடந்தவற்றிற்கு மாற்றமாகவும் 25 வருடங்களாக எனக்கு ஆறுதல் வழங்கி வருகின்றன. ஆயிரக்கணக்கான சாட்சியங்களையும் வழக்கத்திற்கு மாற்றமான அடையாளத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கின்ற அந்த தூய இறை அறிவிப்பிற்கு எதிராகவும் என்னால் எப்படி கூடி முடியும்? இறைவனின் பணி பொருத்தமற்றதாகவும் ஞானமற்றதாகவும் இருப்பதில்லை. ஒரு நபர் எந்த காரணமுமின்றி கடவுளாக ஆக்கப்பட்டிருப்பதையும் நாற்பது கோடி மக்கள் அவரை வணங்கிக் கொண்டிருப்பதையும் அவன் பார்த்தான். அப்போது இந்தக் கொள்கையில் மிகைத்து நிற்பது அதன் உச்சத்தை அடைந்திருந்த அத்தகைய காலத்தில் அவன் என்னை அனுப்பினான். எல்லா நபிமார்களின் பெயரையும் எனக்கு சூட்டினான். ஆனால், மஸீஹிப்னு மர்யம் (மர்யமின் மகன் ஈஸா) என்ற பெயரால் குறிப்பாக எனக்கு சிறப்பினை வழங்கி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது செய்யப்படாத அந்த கருணையையும் அருளையும் அவன் என் மீது செய்துள்ளான். அருள் இறைவனின் கையில் இருக்கின்றது. அவன், தான் விரும்புபவருக்கு வழங்குகின்றான் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான். நான் என் தரப்பிலிருந்து இந்த விஷயங்களைக் கூறுகின்றேன் என்றால் நான் பொய்யனாவேன். ஆனால், இறைவன் என் தொடர்பாக தனது அடையாளங்களுடன் சாட்சி கூறுகின்றான் என்றால் என்னை பொய்ப்படுத்துவது இறைச்சத்திற்கு மாற்றமானதாகும். தானியேல் தீர்க்கதரிசியும் கூட எழுதியிருப்பது போன்றே எனது வருகை இறைவனின் முழுமையான கம்பீரம் வெளிப்படுவதற்கான நேரமாக இருக்கின்றது. மேலும் எனது காலத்தில் வானவர்களுக்கும் ஷைத்தான்களுக்குமிடையில் இறுதிப்போர் இருக்கின்றது. அந்த சமயத்தில் இறைவன் எப்போதும் காட்டாத அந்த அடையாளத்தைக் காட்டுவான். அதாவது இறைவன் சுயமே பூமியில் இறங்கி வருவான். இதைப் பற்றி அவனே هَلْ يَنظُرُونَ إِلَّا أَن يَأْتِيَهُمُ اللَّهُ فِي ظُلَلٍ مِّنَ الْغَمَامِ அதாவது, அந்த நாளில் மேகங்களில் உமது இறைவன் வருவான். அதாவது மனிதத் தோற்றத்தின் மூலமாக தனது கம்பீரத்தை வெளிப்படுத்துவான். மேலும் தனது முகத்தைக் காட்டுவான் என்று கூறுகின்றான். இறை மறுப்பும் இறைவனுக்கு இணை வைத்தலும் மிகவும் மிகைத்திருந்தது. அவன் அமைதியாக இருந்தான். ஒரு மறைவான கருவூலம் போன்று அவன் ஆகி விட்டான். இப்போது இறைவனுக்கு இணை வைத்தலும் மனிதனை வணங்குவதும் மிகைத்து அதன் முழுமையை அடைந்து விட்டது. இஸ்லாம் அதன் கால்களின் கீழ் நசுக்கப்பட்டு விட்டது. எனவேதான், நான் பூமியில் இறங்குவேன். ஆதமின் சந்ததி உருவாகியதிலிருந்து ஒருபோதும் நான் காட்டாத அந்த எனது கோபத்தின் அடையாளத்தைக் காட்டுவேன் என்று இறைவன் கூறுகின்றான். தற்காப்பு பகைவனின் தாக்குதலுக்கேற்பவே இருந்தது என்பதே இதிலுள்ள ஞானமாகும். எனவே, எந்த அளவு மனிதனை வணங்குபவர்கள் இறைவனுக்கு இணை வைப்பதில் மிகைத்து நிற்கின்றனர் என்பதே இதிலுள்ள ஞானமாகும். எனவே, எந்த அளவு மனிதனை வணங்குபவர்கள் இறைவனுக்கு இணை வைப்பதில் மீமகைத்து நிற்கின்றனர் என்றால் அதுவும் கூட அதன் உச்சத்தை அடைந்து விட்டது. எனவே, இறைவன் சுயமே இறங்குவான். மனிதர்களுக்கு அவன் எந்த வாளையும் தரமாட்டான். எந்த ஜிஹாதும் நடக்காது. எனினும், அவன் தனது கையைக் காட்டுவான். மஸீஹ் தோன்றுவார். இறுதியில் தோன்றும் மஸீஹ் (இந்தக் காலத்தில் தோன்றும் மஸீஹ் என்பது இதன் கருத்தாகும்) முதல் மஸீஹை விட சிறந்தவராக

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று அல்லாஹ்வின் அருளால் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது - இன்ஷா அல்லாஹ். மாலையில் அது மரபிற்கேற்ப தொடங்கப்படும். அல்லாஹ் இந்த மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அனைவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் வைத்திருந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுபவர்களாக்குவானாக! இதில் கலந்து கொள்பவர்கள் அனைவரையும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆக்களுக்கு வாரிசாக்குவானாக!

மாநாட்டில் கலந்து கொள்வது ஏதோ திருவிழாவில் கலந்து கொள்வதல்ல. எனவே, கலந்து கொள்கிற ஒவ்வொருவரின் கவனத்தின் மையப்புள்ளியானது மார்க்க மற்றும் அறிவுப்பூர்வமான ஆன்மீக முன்னேற்றத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும்.

மாநாட்டிற்கு வருபவர்கள், மாநாடு நடைபெறும் நேரங்களில் மாநாட்டு நிகழ்ச்சிகளை மாநாட்டுக் கூடாரங்களில் அமைதியாக அமர்ந்து அதனை கேட்பதை உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். சொற்பொழிவாளர்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் இவ்வளவு நேரங்கள் உழைத்து சொற்பொழிவுகளை ஆயத்தம் செய்கின்றனர். அதனை கவனத்துடன் கேளுங்கள். பிறகு நினைவிலும் வையுங்கள். கேட்கக்கூடிய ஆண்களும் பெண்களும் இந்த சொற்பொழிவுகளில் ஒரு 50 சதவீதத்தையாவது நினைவில் கொண்டால் அவர்களுக்கு தங்களது மார்க்க, அறிவுப்பூர்வமான, ஆன்மீக தகுதியை பல மடங்கு அதிகரிக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

நமது மாநாடுகளில் சொற்பொழிவாளர்களுக்கும் அத்தகைய நோக்கம் இல்லை. பொதுவாக கேட்பவர்களுக்கும் அந்த நோக்கம் இல்லை; இருக்ககவும் கூடாது. பேச்சின் மையக்கருத்தை புரிந்து அதனை தனது சீர்திருத்தத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்துவதை விடுத்து தற்காலிக ரசனையைப் பெறுவது கூடாது. நமக்குள்ளும் அவ்வாறு சிலர் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் தம்மை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாநாட்டினால் நமது அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தில் நல்ல தாக்கம் ஏற்படவில்லை எனில் மனித பலவீனத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப சில சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவிலிருந்து நம்மில் சிலர் சரியான பயன் அடையவில்லை எனில் அது நமக்கு மிகவும் கவலையளிக்கும் விஷயமாகும். எனவே, மாநாட்டிற்கு வருபவக்ள் இதனை உறுதிப்படுத்துங்கள். அவர்கள் இந்த மூன்று நாட்களில் உலகியல் விவகாரங்களை மறந்து விட்டு தங்களது மார்க்கம் மற்றும் ஆன்மீக தகுதியை உயர்த்த வேண்டும்.

அஹ்மதிகள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கிறார்கள் என்றால் ஒரு வகையில் சந்தேகமின்றி அவர்களும் விருந்தினர்கள்தான். ஆனால், அவர்களின் நோக்கம் விருந்தாளியாகி அமர்வதாக இருக்கக் கூடாது. மாநாட்டின் பரக்கத்துகளிலிருந்து பங்கு பெறுவதற்காகவே அவர்கள் வருகின்றனர்.

விருந்தினர்கள் இந்நாட்களில் எவ்வளவு வசதி உள்ளதோ அதைக் கொண்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். இரவையும் பகலையும் ஒன்றாக்கியவாறு ஒவ்வொரு துறையிலும் விருந்தோம்பலின் கடமையை நிறைவேற்ற முயற்சி செய்த தொண்டர்களுக்கும் நன்றி செலுத்துங்கள். மாநாட்டின் மூன்று நாட்களிலும் நாம் இறைவனை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்ற முயற்சியில் விருந்தாளிகள் இருக்க வேண்டும். அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு இந்நாட்களைக் கழியுங்கள். அவனிடம் நல்லதைக் கேட்டவாறு கழியுங்கள். ஒவ்வொரு தீங்கிலிருந்தும் இறைவனிடம் அடைக்கலம் தேடியவாறு இந்நாட்களைக் கழியுங்கள்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இறை வணக்கத்தின் உரிமையை நிறைவேற்றுவது அவசியமாகும். அல்லாஹ்வின் காரியங்களை செயல்படுத்துவதும் அவசியமாகும். இந்த நாட்களில் இந்த அடிப்படையில் உங்கள் வாழ்வை அமையுங்கள். இது இந்த நாட்களில் மட்டுமல்ல. இவை வழக்கமாகி விட்டால் அது ஒவ்வொருவரின் வாழ்வின் நிரந்தர அங்கமாகி விடும்.

தொழும்போதும் மாநாட்டின் நேரத்திலும் போனை அணைத்து வையுங்கள் அல்லது குறைந்தபட்சம் மணியோசையை Silent -ல் போடுங்கள்.

எந்தவொரு நிர்வாக மேம்பாட்டிற்கும் மாநாட்டிற்கு வருபவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். எல்லா ஏற்பாடுகளும் கலந்து கொள்பவர்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காகவே செய்யப்படுகின்றன.

ஜமாஅத்தின் அழகு இதுதான். ஒவ்வோர் அஹ்மதியும் நிர்வாகத்தின் அங்கமாகும். மாநாட்டில் கலந்து கொள்ள வருபவர் அவர் தொண்டராக இருந்தாலும் சரி தொண்டர் அல்லாதவராக இருந்தாலும் சரி குறிப்பாக பார்கிங், ஸ்கேனிங், உணவு உண்ணுமிடம் மாநாட்டுத் திடல் இந்த அனைத்து இடத்திலும் ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் இருப்பது அவசியமாகும். தனது சுற்றுப்புறத்தின் மீது ஒரு பார்வையை வைத்திருப்பது அவசியமானதாகும். எந்தவொரு அசாதாரண பொருளை பார்த்தாலும் அசாதாரண அசைவைக் கண்டாலும் உடனடியாக நிர்வாகத்திற்கு எச்சரிக்கை செய்யுங்கள். நீங்களும் எச்சரிக்கையாக இருங்கள். ஆனால் எல்லா நிலையிலும் கவனமின்மை இருக்கக் கூடாது.

பெண்கள் நினைவில் கொள்ளுங்கள். பெண்களிடம் நகைகள் இருந்தால் அதனை அணிந்து கொள்ளுங்கள். முதலாவதாக மாநாட்டிற்கு நகைகளைக் கொண்டு வரக் கூடாது. மார்க்கச் சூழலில் நாளைக் கழித்து வருகிறீர்கள். உலகியல் விழாக்களுக்கு வரவில்லை. எனவே வந்தவர்கள் சிலர் கொண்டு வந்து விட்டால் சரி, அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் வருபவர்கள் தமது நகை மற்றும் ஆடைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதில் மாநாட்டின் இந்த நாட்களில் ஆன்மீக முன்னேற்றங்களை கவனத்தில் கொள்ளுங்கள்.

பிறகு மீண்டும் கூறுகிறேன். குறிப்பாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்நாட்களில் தொழுகைகள், நஃபில்கள் தவிர இறைவனை நினைவுர் கூர்வதிலும், ஸலவாத் ஓதுவதிலும், பிற துஆக்களைச் செய்வதிலும் நேரத்தை செலவிடுங்கள். அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்கு உரியதாக்குவானாக! நமது அனைவரின் துஆவையும் ஒப்புக் கொள்வானாக! ஒவ்வொரு விஷமத்திலிருந்தும் பாதுகாப்பானாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**12 ஆகஸ்டு 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **12 ஸஹுர்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இன்று அல்லாஹ்வின் அருளால் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது – இன்ஷா அல்லாஹ். மாலையில் அது மரபிற்கேற்ப தொடங்கப்படும். அல்லாஹ் இந்த மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அனைவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் வைத்திருந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுபவர்களாக்குவானாக! இதில் கலந்து கொள்பவர்கள் அனைவரையும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆவுக்களுக்கு வாரிசாக்குவானாக!

ஒவ்வோர் அஹ்மதியும் இதனை அறிந்துள்ளனர். இதுபற்றி அவருக்கு தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, மாநாட்டில் கலந்து கொள்வது ஏதோ திருவிழாவில் கலந்து கொள்வதல்ல. எனவே, கலந்து கொள்கிற ஒவ்வொருவரின் கவனத்தின் மையப்புள்ளியானது மார்க்க மற்றும் அறிவுப்பூர்வமான ஆன்மீக முன்னேற்றத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் அன்னார் இந்த சிந்தனையுடன் மாநாட்டில் கலந்து கொள்ளாதவர் மீது தமது கோபத்தையும் கூட வெளிப்படுத்தியுள்ளார்கள்.

(ஷஹாதத்துல் குர்ஆன். ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 395)

மாநாட்டின் நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவாளர்கள் பேச வேண்டிய தலைப்புகளைப் பற்றி முதலில் ஒரு கமிட்டி ஆலோசனை செய்கிறது. அவை, மார்க்க அறிவுப்பூர்வமான ஆன்மீக முன்னேற்றத்தை உருவாக்குவதற்கு உதவி செய்பவையாக இருக்கின்றன. இந்த தலைப்புகளின் ஒரு நீண்ட பட்டியல் இருக்கின்றது. காலத்தின் கலீஃபாவிடம் அப்பட்டியல் ஒப்புதலுக்கு வருகிறது. அவற்றின் சில தலைப்புகள் தேர்வு செய்யப்பட்டு அதை சொற்பொழிவாளர்கள் இங்கு எடுத்து வைக்கிறார்கள். அதன் மூலம் கலந்து கொள்பவர்கள் மார்க்க, அறிவுப்பூர்வமான ஆன்மீக முன்னேற்றத்திற்க மிகச் சிறந்த கருத்துக்களை வழங்குவதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. எனவே, மாநாட்டிற்கு வருபவர்கள், மாநாடு நடைபெறும் நேரங்களில் மாநாட்டு நிகழ்ச்சிகளை மாநாட்டுக் கூடாரங்களில் அமைதியாக அமர்ந்து கேட்பதை உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

சில வேளைகளில் ஆண்கள் தரப்பிலும் பொதுவாக பெண்கள் தரப்பிலிருந்தும் புகார்கள் வருகின்றன. மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து, அமைதியாக நிகழ்ச்சிகளைக் கேட்பதற்குப் பதில் மாநாட்டுக் கூடாரங்களுக்கு வெளியில் சிறு குழுக்களாக அமர்ந்து சிலர் பொழுதைப்போக்குகின்றனர். குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்து கூடாரத்திற்கு அருகிலேயே அவர்களுக்கு விளையாட வாய்ப்பளிக்கப்படுகின்றது. இதனால், மார்க்க சபைகளின் புனிதத்தன்மை குறித்து குழந்தைகளுக்கும் உணர்வில்லாமல் போய் விடும். குழந்தைகள் விளையாடித் திரியும் அளவுக்கு சிறியவர்களாக இருந்தால் அவர்களை அமைதிப்படுத்துவதற்கு ஏதாவது ஒன்றைக் கொடுப்பது அவசியம் என்றால் அக்குழந்தைகளை குழந்தைகளுக்கான கூடாரங்களுக்கு கொண்டு செல்லுங்கள். அங்கு அவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளன. ஆனால், பிரதான கூடாரங்களில் ஆண்களும் சரி, பெண்களும் சரி குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்க, பெற்றோர் அருகில் அமர்ந்து கூடிப் பேசிக் கொண்டிருப்பது எந்த வகையிலும் சரியானதல்ல. இதனை தன்னார்வத் தொண்டர்கள் தடுத்தால், எங்களை தடுக்கின்றனர் என்று சிலர் அதனை தவறாகவும் நினைக்கின்றனர். ஆனால், இங்கு தவறு விருந்தினர்கள் உடையதாகும். இது தன்னார்வத் தொண்டர்களின் தவறல்ல.

நான் கூறியது போன்று, சொற்பொழிவிற்கான தலைப்புகளுக்காகவே ஒரு கமிட்டி ஆய்வு செய்கிறது. பிறகு பல்வேறு தலைப்புகள் பரிந்துரைக்கப்பட்டு அவற்றை எனக்கு அனுப்புகின்றனர். அவற்றிலிருந்து நான் சூழ்நிலைக்கேற்ப 7–8 தலைப்புகளை தீர்மானிக்கிறேன். தீர்மானம் செய்யப்பட்ட பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள் சொற்பொழிவாளர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் பல நாட்கள் இன்னும் சொல்வதாயின், பல மாதம் வரை செலவிட்டு சொற்பொழிவுகளை ஆயத்தம் செய்கின்றனர். சுருக்கமான நேரத்தில் மிகவும் முயற்சி செய்து அந்த தலைப்பின் திரண்ட கருத்துக்களை எடுத்துரைக்க முயற்சி செய்கின்றனர். எனவே, ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். சொற்பொழிவாளர்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் இவ்வளவு நேரங்கள் உழைத்து சொற்பொழிவுகளை ஆயத்தம் செய்கின்றனர். அதனை கவனத்துடன் கேளுங்கள். பிறகு நினைவிலும் வையுங்கள். கேட்கக்கூடிய ஆண்களும் பெண்களும் இந்த சொற்பொழிவுகளில் ஒரு 50 சதவீதத்தையாவது நினைவில் கொண்டால் அவர்களுக்கு தங்களது மார்க்க, அறிவுப்பூர்வமான, ஆன்மீக தகுதியை பல மடங்கு அதிகரிக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ஒவ்வொருவரும் சொற்பொழிவுகளை கவனம் செலுத்தி கேட்க வேண்டும். முழு கவனத்துடனும் சிந்தனையுடனும் கேளுங்கள். ஏனெனில் இது ஈமானுடைய விவகாரம் ஆகும். இதில் சோம்பல், அசட்டை, கவனமின்மை மிகவும் தீய விளைவை ஏற்படுத்துகிறது. எவர்கள் ஈமானில் அலட்சியமாக இருக்கிறார்களோ, அவர்களை விளித்து ஏதாவது கூறினால், ஆழ்ந்து கேட்கமாட்டார்களோ, அவர்களைப் பொறுத்தவரை பேசுபவர் எவ்வளவு பயனுள்ள மற்றும் தாக்கத்தை உருவாக்கக் கூடிய கருத்தைக் கூறினாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது.

அவர்கள் கூறினார்கள்: அத்தகைய மக்களைப் பற்றி கூறப்படுகிறது. அவர்களிடம் காதுகள் உள்ளன. ஆனால், கேட்பதில்லை. அவர்களிடம் உள்ளம் இருக்கிறது. ஆனால், புரிவதில்லை. எனவே நினைவில் கொள்ளுங்கள். எது கூறப்படுகிறதோ அதனை மிகவும் கவனத்துடனும் சிந்தித்தும் கேளுங்கள். ஏனெனில் எவர் மிகவும் கவனத்துடன் கேட்பதில்லையோ, அவர் எவ்வளவு காலம் வரை, தான் பயன் தருகின்ற ஒருவரது நட்பில் இருந்தாலும் சரி, அவருக்கு எந்தப் பயனும் அதனால் ஏற்பட முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 142-143; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, சில வேளை இத்தகைய புகார்கள் வருகின்றன. கூடாரத்தின் கடைசிப் பகுதியில் இருப்பவர்கள் அது ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி, இதனை உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்த புகார்கள் எல்லாம் சரியானது தான் என்றால் பணியாளர்களுக்கு இவ்வாறு புகார் செய்ய வாய்ப்பு தரக்கூடாது. அவர்கள் மாநாட்டின் நிகழ்ச்சிகளை மிகவும் கவனத்துடன் கேட்க வேண்டும். அதிலிருந்து நாம் மனதளவில் ஒரு ரசனையை மட்டும் எடுத்தால் போதாது அல்லது ஏதாவது அறிவுப்பூர்வமான ஒரு கருத்தைக் கேட்டு அறிவுப்பூர்வமான ரசனையை மட்டும் பெற்றால் போதாது. மாறாக, நிரந்தரமாக அறிவுப்பூர்வமான ஆன்மீக பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். பிறகு சிலர் இருக்கிறார்கள். தமக்குப் பிடித்தமான சொற்பொழிவாளர்கள் என்று சிலரை தேர்ந்தேடுத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களது சொற்பொழிவுகள் வரும்போது மட்டும் மாநாட்டுத் திடலுக்கு வருகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது ஜமாஅத் மற்றும் என்னைப் பொருத்தவரையிலும் சரி நான் விரும்புவதாவது, வெளிப்படையான "சொன்னது சொல்லப்பட்டது" என்று கூறப்படுகின்ற சொற்பொழிவுகளை மட்டும் விரும்பக் கூடாது. அனைத்து நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதை பேசுபவர் எவ்வளவு வசீகரமாகப் பேசுகிறார்? வார்த்தைகளுக்கும் எவ்வளவு அழுத்தம் தருகிறார்? என்ற அளவில் மட்டும் நின்று விடக் கூடாது.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் இவ்விஷயத்தில் திருப்தி அடைவதில்லை. நான் விரும்புவதாவது இது செயற்கையாக அல்லது இயல்பிலேயே அது இருக்கிறது. எந்த பணி நடக்கின்றதோ அதை அல்லாஹ்வுக்காக செய்ய வேண்டும். என்ன பேசினாலும் இறைவனுக்காக பேச வேண்டும். முஸ்லிம்களிடம் வீழ்ச்சி ஏற்படுவதற்கு மிகப் பெரும் காரணம் இவையேயாகும். இந்த மாதிரியான கான்ஃபரன்ஸுகள், சபைகள், அஞ்சுமன்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும் பெரும் சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவாற்றுகிறார்கள். கவிஞர்கள் சமுதாயத்தின் நிலைமை குறித்து பேசுகிறார்கள். இவையெல்லாம் என்ன? இதனால் எந்த விளைவும் ஏற்படாது. சமுதாயம் நாளுக்கு நாள் வளர்ச்சிக்குப் பதில் வீழ்ச்சியின் பக்கமே செல்கிறது.

அவர்கள் கூறுகிறார்கள்: விஷயம் என்னவென்றால் இந்த சபைக்கு வருபவர்கள் கலப்பற்ற தூய்மையை எடுத்துக் கொண்டு செல்வதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398,399,401; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உலகியல்வாதிகளின் சொற்பொழிவுகளைக் குறித்து அன்னார் இக்கருத்தைக் கூறியுள்ளார்கள். அவர்களது சொற்பொழிவுகள் மார்க்கத்தின் பெயரால் இருந்தாலும் சரி, உலகப் பெயரையும் புகழையும் பெற வேண்டும் என்பதற்காக இருந்தாலும் சரியே.

அது மட்டுமின்றி அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இந்த சொற்பொழிவாளர்களுள் பெரும்பாலார் அறிவுப்பூர்வமான ஆன்மீக முன்னேற்றத்தை மக்கள் பெறுவதற்கு நமது சொற்பொழிவு காரணமாக வேண்டும் என்று நினைப்பதற்குப் பதில் நமது சொற்பொழிவைக் கேட்கும்போது மக்கள் ஆஹா! அருமை! என்று கூற வேண்டும் என்று நினைக்கிறார்கள். அத்தகைய சொற்பொழிவாளர்கள் நமது சொற்பொழிவின்போது கேட்பவர்களை தம்மை வணங்குபவர்களாக்கி விடுகின்றனர்.

அதே போன்று கேட்பவர்களைப் பற்றி அன்னார் கூறுகிறார்கள்: அவர்களும் கலப்பற்ற மனதுடன் மாநாட்டிற்கு வருவதில்லை. பேச்சுக்களைக் கேட்பதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 401; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, கலப்பற்ற மனதுடன் வந்தால் முற்றிலும் நல்ல தாக்கம் ஏற்படும். எவ்வாறிருப்பினும் நமது மாநாடுகளில் சொற்பொழிவாளர்களுக்கும் அத்தகைய நோக்கம் இல்லை. பொதுவாக கேட்பவர்களுக்கும் அந்த நோக்கம் இல்லை; இருக்ககவும் கூடாது. பேச்சின் மையக்கருத்தை புரிந்து அதனை தனது சீர்திருத்தத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்துவதை விடுத்து தற்காலிக ரசனையைப் பெறுவது கூடாது. நமக்குள்ளும் அவ்வாறு சிலர் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் தம்மை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ் நம்மீது பேரருள் செய்துள்ளான். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த பேரருளுக்கான உரிமையை நாம் எந்நிலையில் செலுத்துவோம் எனில், அல்லாஹ்வுக்கு எந்நிலையிலும் நாம் உண்மையான நன்றி செலுத்துபவர்களாக முடியும் எனில், நாம் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காகவே ஒவ்வொரு பணியையும் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக ஒவ்வொரு பணியையும் செய்பவராக இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு சிறு சிறு விஷயங்களின் பக்கம் கவனமூட்டுவதன் காரணம் ஒரு சிலரின் பலவீனம் பெரும்பாலார் யோசிப்பதற்குக் காரணமாகி விடக் கூடாது. ஒரு சிலரைப் பார்த்து விட்டு புதிதாக வரக்கூடிய சந்ததிகள் இவ்வாறு மாநாட்டில் வந்து அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதையும், சொற்பொழிவில் கவனம் செலுத்தாததையும் பார்த்து விட்டு இது அனுமதிக்கப்பட்ட காரியம் தான் என்று கருதி விடக்கூடாது. இது சம்பந்தமாக நான் கூறக் காரணம், நினைவூட்டுவதற்கும், ஏதாவது பலவீனம் இருந்தால் அத்துடன் அது விலக வேண்டும் என்பதற்காகவுமே ஆகும். அதன் மூலம் புதிய சந்ததிகள் நமது பிள்ளைகள், இளைஞர்கள் மாநாட்டின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

இந்த மாநாட்டினால் நமது அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தில் நல்ல தாக்கம் ஏற்படவில்லை எனில் மனித பலவீனத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப சில சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவிலிருந்து நம்மில் சிலர் சரியான பயன் அடையவில்லை எனில் அது நமக்கு மிகவும் கவலையளிக்கும் விஷயமாகும். அல்லாஹ் சொற்பொழிவாளர்களின் நாவிலும் பரக்கத்தை வழங்குவானாக! கேட்பவர்களின் மனதில் எவ்வாறு பதிய முடியுமோ அந்த அளவுக்கு சொற்பொழிவாளர்கள் தமக்கு தரப்பட்ட தலைப்பை கூறுவதற்கு வாய்ப்பு தருவானாக! கூறப்படுகின்ற விஷயங்கள் அல்லாஹ் மற்றும் ரஸூலின் பேச்சுக்கள் ஆகும். பேரன்பு மற்றும் பற்று பற்றிய விஷயங்களாகும். இறை தொடர்பு பற்றிய விஷயங்களாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மீது அன்பு கொள்ளுதல் பற்றிய விஷயமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றிய பேச்சுகள், கட்டுப்படுதல் பற்றிய பேச்சுகள் ஆகும். அவை மக்கள் உள்ளங்களில் நுழைந்து நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

எனவே, மாநாட்டிற்கு வருபவக்ள் இதனை உறுதிப்படுத்துங்கள். அவர்கள் இந்த மூன்று நாட்களில் உலகியல் விவகாரங்களை மறந்து விட்டு தங்களது மார்க்கம் மற்றும் ஆன்மீக தகுதியை உயர்த்த வேண்டும். அல்லாஹ் எல்லாருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! மாநாட்டில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு கவனமூட்ட விரும்புவதாவது, விருந்தினர்களுக்கு சேவை செய்வதற்காக ஆண்களிலும் சரி, பெண்களிலும் சரி தன்னார்வத் தொண்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருந்தாளிகளுக்கு சேவை செய்வதற்காக தன்னார்வத் தொண்டர்கள் மாநாட்டின் இந்த நாட்களில் தம்மை அர்ப்பணித்துள்ளனர் என்று கூற வேண்டும். இவர்களில் கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் படிக்கிற மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுள் பெரும்பாலார் சொந்தமாக தொழில் செய்வோர், சிலர் பெரும் பதவிகளை வகிப்பவர்களும் ஆவர். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு தொண்டு செய்யும் உணர்வுதான் ஒரு பள்ளி மாணவரையும் ஒரு கூலித் தொழிலாளியையும் உலகியல் அடிப்படையில் கண்ணியத்திற்குரிய பதவியில் இருப்பவர்களையும் ஒரே மட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. எனவே, பணியாளர்களிடம் தவறாக நடந்து கொள்ளக் கூடிய விருந்தாளிகள் தமது உணர்வை கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டும். தொண்டர்களின் சுய மரியாதையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சந்தேகமின்றி தொண்டர்களுக்கு எந்நிலையிலும் பொறுமை மற்றும் விவேகத்துடன் நடந்து கொள்ளுமாறு தான் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மனித பலவீனத்தின் காரணமாக சில தொண்டர்கள் கடுமையான பதிலைக் கூறி விடுகின்றனர்.

எனவே, விருந்தாளிகளும் தொண்டர்களை கண்ணியமாகவும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் நடக்க வாய்ப்பளிக்கும் விதத்தில் எந்த சூழ்நிலையிலும் நடந்து கொள்ளாதீர்கள். பிறகு பிள்ளைகளும் இளைஞர்களும் ஓர் உணர்வின் காரணமாக வேலை செய்ய வருகிறார்கள். சில வேளையில் விருந்தாளிகளின் தவறான நடைமுறையின் காரணமாக பிறகு அவர்களுக்கு மனமில்லாமல் போய் விடுகிறது. ஜமாஅத் அல்லாத விருந்தாளிகளுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டு அதனால் எதனையாவது வெளிப்படுத்தினால் பொதுவாக அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. அவ்வாறு செய்தால் அது ஏற்கத்தக்கது தான். அவர்களுக்கு ஏதாவது கஷ்டம் என்றால் அதனை அகற்றி அவர்களை சுகமளிக்க முழு முயற்சி செய்ய வேண்டும்தான். ஆனால், அஹ்மதிகள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கிறார்கள் என்றால் ஒரு வகையில் சந்தேகமின்றி அவர்களும் விருந்தினர்கள்தான். ஆனால், அவர்களின் நோக்கம் விருந்தாளியாகி அமர்வதாக இருக்கக் கூடாது. மாநாட்டின் பரக்கத்துகளில் இருந்து பங்கு பெறுவதற்காகவே அவர்கள் வருகின்றனர்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சிந்தனையுடன் வரவும் வேண்டும். எனவே, அவர்களின் தங்குமிடம், உணவு நேரங்கள் ஆகியவற்றைப் பொருத்தவரையில் இங்கு தங்குமிடம் இல்லை. அவர்கள் வந்து போகும்போது, வாகனம் நிறுத்தும் இடங்களில் சில காரணங்களால் சிரமம் ஏற்பட்டாலும் கூட திறந்த மனதுடன் பொறுமையுடனும் அதனை சகித்துக் கொள்ள வேண்டும். இங்கு எல்லா வசதிகளும் தற்காலிகமாக செய்யப்படுகின்றன. கடந்த குத்பாவில் குறிப்பிட்டேன். சில நாட்களுக்காக முழு நகரமாக ஆக்கப்படுகிறது. சில நாட்களுக்குள் அதனை கலைக்கவும் வேண்டியதுள்ளது. தொண்டர்கள் தான் இவை அனைத்தையும் செய்கின்றனர். எவ்வாறிருப்பினும், எங்கு தற்காலிக வசதி செய்யப்படுகிறதோ அங்கு ஏதாவது சிறிது கஷ்டம் இருக்கும். எவ்வளவு தான் சிறந்த ஏற்பாடுகள் செய்ய முயற்சி செய்தாலும் சரியே. அதற்குப் பிறகும் கூட சில ஏற்பாடுகளைச் செய்ய முடியாமல் போய் விடும். அவற்றை நிரந்தரமான இடங்களில் மட்டுமே செய்ய முடியும்.

என்னிடம் கூறப்பட்டது. கடந்த வருடம் மாநாட்டில் கலந்து கொண்ட பெண்மணி ஒருவர் கூறினார்: கூடாரங்களில் AC வசதி இருக்க வேண்டும். வெப்பமான பருவநிலை உள்ளது. ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது எமக்கும் ஏற்பாடு செய்பவர்களுக்கும் தெரியும். ஆனால் இவ்வாறான சூழலில் AC பொருத்துவது மிகவும் சிரமமாகும். காற்று வெளியே செல்வதற்கு கதவை திறந்து வைக்க வேண்டும். இது ஒரு எளிய காரியம் என்று மக்கள் கருதுகிறார்கள் அல்லது மின்விசிறிகளை ஏற்பாடு செய்வது சாதாரண விஷயம் என்று நினைக்கிறார்கள். சில தொழில்நுட்பம் சார்ந்த விஷயங்களில் சில தடைகளும் பிரச்சனைகளும் வருகின்றன. மின்விசிறிகளை அமைப்பதும் சில நேரங்களில் சிரமமாகும். பிறகு செலவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியதுள்ளது. ரப்வாவில் மாநாடு நடந்தது. இப்போதும் காதியானில் நடக்கிறது. குளிர் காலத்தில் சில நேரங்களில் மழையில் திறந்த வெளியில் அமர்ந்து கூட மக்கள் மாநாட்டைக் கேட்கிறார்கள். குளிரையும் சகித்துக் கொள்கின்றனர். கலந்து கொள்பவர்களுக்கு சிறிய பெரிய சிரமங்களை சகித்துக் கொள்ள வேண்டியது வந்தாலும் வெப்பத்தை சகித்துக் கொள்ள வேண்டியது வந்தாலும் அவர்கள் அதனை சகித்துக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தின் போது பல்வேறு பொருட்கள் தொடர்பான கோரிக்கையை வைக்கின்ற அத்தகைய மக்களைப் பார்த்து கூறினார்கள்: பாருங்கள்! ஒரு விருந்தாளி இங்கு சுகம் கிடைக்கும். குளிர்ந்த சர்பத் கிடைக்கும். விதவிதமான சிறந்த உணவு கிடைக்கும் என்ற விஷயங்களுக்காக வருகிறார்கள் என்றால் ஒருபுறம் விருந்தோம்பல் செய்பவருக்கும் முடிந்த வரை விருந்தாளிக்கு எந்த குறையும் வைக்காமல் இருப்பது கடமையாகும். விருந்தாளிக்கு வசதி செய்து தரவும் வேண்டும்; தருகிறார்கள். ஆனால், விருந்தினர்கள் சுயமே அவ்வாறு எண்ணுவது அவரது இழப்பிற்குக் காரணமாகி விடும். (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 372; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, விருந்தினர்கள் இந்நாட்களில் எவ்வளவு வசதி உள்ளதோ அதைக் கொண்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். இரவையும் பகலையும் ஒன்றாக்கியவாறு ஒவ்வொரு துறையிலும் விருந்தோம்பலின் கடமையை நிறைவேற்ற முயற்சி செய்த தொண்டர்களுக்கும் நன்றி செலுத்துங்கள். மாநாட்டின் மூன்று நாட்களிலும் நாம் இறைவனை எவ்வாறு திருப்திப்படுத்துவது என்ற முயற்சியில் விருந்தாளிகள் இருக்க வேண்டும். அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு இந்நாட்களைக் கழியுங்கள். அவனிடம் நல்லதைக் கேட்டவாறு கழியுங்கள். ஒவ்வொரு தீங்கிலிருந்தும் இறைவனிடம் அடைக்கலம் தேடியவாறு இந்நாட்களைக் கழியுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த மனிதர் ஓரிடத்தில் தங்கியிருக்கும்போது அல்லது தற்காலிமாக கூடாரமிட்டுத் தங்கும் போது, அல்லாஹ்வின் முழுமையான வார்த்தைகளின் அடைக்கலத்தில் வருகிறேன். ஒவ்வொரு தீங்கிலிருந்தும் இறைவனது அடைக்கலத்தை விரும்புகிறேன் என்று துஆ செய்வாரோ அவர் அந்த தங்குமிடத்தை விட்டுச் செல்லும் வரை (அது தற்காலிகமான தங்குமிடமாக இருந்தாலும் அங்கிருந்து செல்லும் வரை) எந்த ஒன்றும் அவருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தாது. (முஸ்லிம் கிதாபுல் திக்ரு வத்துஆ பாபுத்தஅவ்வுஸ் மின் சூயில் கஸா... ஹதீஸ் எண் 2708)

எனவே, குறிப்பாக இந்த நாட்களில் இந்த துஆவைக் கேளுங்கள். உலகின் சூழ்நிலையாவது, எந்த நேரத்தில் எவர் விஷமம் செய்வார் என்பது யாருக்கும்

தெரியாது. எந்த வகையான நஷ்டத்தை விளைவிக்க என்ன திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்பது தெரியாது. அல்லாஹ் அவர்களிடமிருந்து நமக்கு பாதுகாப்பு வழங்குவானாக! பிறகு நோய் முதலிய கஷ்டங்கள் உள்ளன. குழந்தைகளுடன் வருபவர்கள் அதனையும் பொருட்படுத்துவதில்லை. சில குழந்தைகளுக்கு எளிதில் கஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. எனவே, இந்த எல்லா துஆக்களும் செய்யப்பட்டால் எல்லா வகையான கஷ்டங்களிலிருந்தும் விஷமங்களிலிருந்தும் அல்லாஹ் காப்பாற்றுகிறான்.

எனவே, எல்லா வகையான கஷ்டங்களிலிருந்தும் தப்பிப்பதற்காக நாம் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் அறிவார். அல்லாஹ் கூறுகிறான்: துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இறை வணக்கத்தின் உரிமையை நிறைவேற்றுவது அவசியமாகும். அல்லாஹ்வின் காரியங்களை செயல்படுத்துவதும் அவசியமாகும். இந்த நாட்களில் இந்த அடிப்படையில் உங்கள் வாழ்வை அமையுங்கள். இது இந்த நாட்களில் மட்டுமல்ல. இவை வழக்கமாகி விட்டால் அது ஒவ்வொருவரின் வாழ்வின் நிரந்தர அங்கமாகி விடும். நான் குழந்தைகளுடன் வருபவர்களைப் பற்றி கூறினேன். எனக்கு தெரிய வந்தது. குழந்தைகளுடன் இரவில் சிலர் வந்தனர். இதற்கான ஏற்பாட்டை செய்தவர்களிடம் படுக்கை, மெத்தைகள் குறைவாகி விட்டது. இதனால் சின்னஞ்சிறு குழந்தை வைத்திருந்த ஒரு சிலருக்கு கஷ்டம் ஏற்பட்டது. குழந்தைகளை அவர்கள் தமக்கென கொண்டு வந்த கம்பளிக்குள் போர்த்திக் கொண்டவாறு தூங்க வைத்து விட்டனர். மக்கள் ஓர் உணர்வுடன் சிறு குழந்தைகளையும் கூட அழைத்துக் கொண்டு வருகிறார்கள். 9–10 மாதக் குழந்தைகள் ஒரு வருட இரண்டு வருடக் குழந்தைகளையும் கொண்டு வந்துள்ளனர். இதே கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இங்கு சரியான ஏற்பாடு இல்லை. குளிர் அதிகமாக இருந்தது. வேறு எங்காவது செல்லுங்கள் என்று கூறப்பட்டால் நாங்கள் சகித்துக் கொள்வோம். எங்களது குழந்தைகளும் சகித்துக் கொள்வார்கள். இங்கேயே இரவைக் கழிப்போம் என்கிறார்கள். அதன் மூலம் மாநாட்டின் சூழலிலிருந்து முழுமையாகப் பயன் அடைவதற்காக அவ்வாறு செய்கின்றனர். எங்களுக்கு நிம்மதி வேண்டும்; வசதி வேண்டும் என்று கேட்பவர்கள் உணருங்கள். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளுள் பெரும்பாலார் நாங்கள் மாநாட்டைக் கேட்கவே வந்தோம். கொஞ்சம் சிரமப்பட வேண்டியது வந்தால் பிரச்சனை இல்லை. சகித்துக் கொள்வோம் என்று கூறுபவர்களாகத்தான் இருந்தனர். அவர்கள் மிகவும் உறுதியான மனப்பக்குவம் உடையவர்களாக உள்ளனர். அதுபோன்றே தமது குழந்தைகளையும் ஆக்க விரும்புகின்றனர். எவ்வாறிருப்பினும், அத்தகைய ரஹ்மத்தைக் கொண்டு வந்த விருந்தாளிகளும் உள்ளனர். அத்தகைய விருந்தாளிகளுக்காக அல்லாஹ் விருந்தோபல் செய்பவரின் பணியையும் எளிதாக்கி விடுகிறான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இரவில் சிலருக்கு கஷ்டம் ஏற்பட்டது. கடந்த இரவில் படுக்கை மற்றும் மெத்தை குறைவு ஏற்பட்ட அந்த விருந்தாளிகளுக்கும் அல்லது ஏதாவது ஒரு வகையில் சிரமத்தை சகித்த விருந்தாளிகளுக்கும் இன்று இரவில் அமைப்பாளர்கள் அந்த சிரமத்தை அகற்றி விடுவர் என்று நம்புகிறேன். நேற்று ஏற்பட்டது போன்ற கஷ்டம் இன்று இரவில் ஏற்படாது என்று நான் நம்புகிறேன் – இன்ஷா அல்லாஹ். மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இன்னொன்றையும் நினைவில் கொள்ளுங்கள். தொழுகை நேரங்களில் குறித்த நேரத்தில் வந்து அமருங்கள். அதன் மூலம் தாமதமாக வருவதனால் இரைச்சல் ஏற்படாமல் இருக்கும். உணவிற்கு தாமதம் ஏற்பட்டால், தொழுகை நேரங்களை கவனிக்கின்ற பொறுப்பாளர்களுக்கு தகவல் கொடுத்து விட வேண்டும். விருந்தாளிகள் உணவு உண்டு கொண்டிருக்கிறார்கள். தொழுகைக்காக 10–15 நிமிடங்கள் தாமதிக்க வேண்டும் என்று கூறி விட்டால் எனக்கு தகவல் தந்து விட்டால் அவர்களுக்காக எதிர்பார்க்கப்படும். எவ்வளவு முயன்றாலும் எனக்கும் கூட வேலைப்பளுவினாலும் சில நிமிடங்கள் தாமதமாகி விடுகிறது. சில வேளை கூடுதல் நேரம் தாமதம் ஆகி விடுகிறது. குறிப்பாக வெளியிலிருந்து வந்த விருந்தாளிகள், ஜமாஅத் அல்லாத விருந்தாளிகளின் சந்திப்பினால் தாமதம் ஆகி விடுகிறது. இருந்தும் கூட நான் பார்க்கிறேன். நான் வந்து தொழுகை ஆரம்பமான பிறகும் கூட கணிசமான மக்கள் உள்ளே வருகிறார்கள். இவ்விஷயத்தில் விருந்தாளிகளும் சரி, தர்பிய்யத் துறையும் சரி கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், இவர்கள் தாமதமாக வருவதனால் மரப்பலகையால் போடப்பட்டுள்ள தரையினால் சப்தம் ஏற்படுகிறது. இந்த இரைச்சலை அகற்றுவதற்கு எவ்வளவு முயற்சி செய்ய முடியுமோ அவ்வளவு செய்தும் கூட சப்தம் வருகிறது. முதலிலேயே வந்து விட்டால் துஆ மற்றும் திக்ரே இலாஹி செய்து கொண்டு இருங்கள். அதற்கும் நற்கூலி கிடைக்கும். அல்லாஹ் ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயத்துக்கும் நற்கூலி வழங்குகிறான். தொழுகையை எதிர்பார்த்து அமர்ந்திருப்பதும் ஒரு நற்கூலிக்கு உரியதாகும்.

(சஹீஹ் புகாரி கிதாபுல் அஸான் பாபு ஸலாத்தில் ஃப்ஜ்ரி ஃபீ ஜமாஅத்தி ஹதீஸ் எண் 651)

இந்த நற்கூலியையும் இழந்து விடக் கூடாது. இதுவே இந்த மூன்று நாட்களைச் சரியாக பயன்படுத்துவதாகும். வெளியில் அங்குமிங்கும் நின்று பேச்சில் மூழ்கி இருப்பதை விட பிறகு நான் வந்து தொழுகை ஆரம்பித்த பிறகு உள்ளே வருவதை விட இதுவே சிறந்தது. நான் ஏற்கனவே கூறியது போன்று இதனால் மரப்பலகையால் ஆன தரையின் காரணமாக தொழுபவர்களுக்கும் சிரமம் ஏற்படுகிறது.

அடுத்து தொழும்போதும் மாநாட்டின் நேரத்திலும் போனை அணைத்து வையுங்கள் அல்லது குறைந்தபட்சம் மணியோசையை Silent –ல் போடுங்கள். குறைத்து வையுங்கள். தமக்கு தவிர்க்க முடியாத அழைப்பு வரலாம் என்று நினைப்பவர் குறைந்தபட்சம் Silent –ல் போட்டு வையுங்கள். இவ்வருடம் அமைப்பாளர்கள் மொபைல் போனிற்கான வசதியை மேம்படுத்தியுள்ளார்கள். நகருக்குள் எந்த அளவுக்கு தெளிவாக சிக்னல் வருமோ அந்த அளவுக்கு இந்த மாநாட்டுப் பகுதிக்கும் கிடைக்கும் என்பது இதற்கான ஏற்பாட்டை செய்தவர்களின் வாதமாகும். இவர்களின் பேச்சைக் கேட்டு அதிகமானவர்கள் சிம் –ஐ போட்டிருக்கலாம். இங்கு ஒரு குறிப்பிட்ட சூழலுக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தொழுகை நேரத்திலும் மாநாட்டின் நேரத்திலும் அதிகமாக போன் மணி அடித்து மேலும் ஒரு பிரச்சனை உருவாகக் கூடாது. இங்கு தமது காரில் கலந்து கொள்ள வருபவர்கள் போக்குவரத்துத் துறையுடன் முழுமையான ஒத்துழைப்புத் தர வேண்டும். அதன் மூலம் அமைப்புக்கு எந்த சிரமமும் ஏற்படக் கூடாது. இம்முறை பார்கிங் – கார் நிறுத்தும் இடத்திற்கான ஏற்பாட்டை இன்னும் மேம்படுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் ஒத்துழைத்தால் மட்டுமே எந்த ஏற்பாடும் சிறப்பாக இருக்க முடியும்.

எனவே, எந்தவொரு நிர்வாக மேம்பாட்டிற்கும் மாநாட்டிற்கு வருபவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். ஸ்கேனிங் துறைக்கு முழுமையாக ஒத்துழைப்பு தாருங்கள். எல்லா ஏற்பாடுகளும் கலந்து கொள்பவர்களின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காகவே செய்யப்படுகின்றன. ஜமாஅத்தின் அழகு இதுதான். ஒவ்வோர் அஹ்மதியும் நிர்வாகத்தின் அங்கமாகும். மாநாட்டில் கலந்து கொள்ள வருபவர் அவர் தொண்டராக இருந்தாலும் சரி தொண்டர் அல்லாதவராக இருந்தாலும் சரி குறிப்பாக பார்கிங், ஸ்கேனிங், உணவு உண்ணுமிடம் மாநாட்டுத் திடல் இந்த அனைத்து இடத்திலும் ஒவ்வொருவரும் எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் இருப்பது அவசியமாகும். தனது சுற்றுப்புறத்தின் மீது ஒரு பார்வையை வைத்திருப்பது அவசியமானதாகும். எந்தவொரு வழக்கத்திற்கு மாற்றமான பொருளைப் பார்த்தாலும், வழக்கத்திற்கு மாற்றமான அசைவைக் கண்டாலும் உடனடியாக நிர்வாகத்திற்கு எச்சரிக்கை செய்யுங்கள். நீங்களும் எச்சரிக்கையாக இருங்கள். ஆனால் எல்லா நிலையிலும் கவனமின்மையாக இருக்கக் கூடாது. ஒருவர் தனது தனிப்பட்ட தங்குமிடத்தில் இருந்தாலும் ஜமாஅத்தின் கூடாரங்களில் இருந்தாலும் தமது பணம் மற்றும் விலை உயர்ந்த பொருள்களை உங்களிடமே வைத்திருங்கள்.

குறிப்பாக பெண்கள் நினைவில் கொள்ளுங்கள். பெண்களிடம் நகைகள் இருந்தால் அதனை அணிந்து கொள்ளுங்கள். முதலாவதாக மாநாட்டிற்கு நகைகளைக் கொண்டு வரக் கூடாது. மார்க்கச் சூழலில் நாளைக் கழித்து வருகிறீர்கள். உலகியல் விழாக்களுக்கு வரவில்லை. எனவே வந்தவர்கள் சிலர் கொண்டு வந்து விட்டால் சரி, அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் வருபவர்கள் தமது நகை மற்றும் ஆடைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதில் மாநாட்டின் இந்த நாட்களில் ஆன்மீக முன்னேற்றங்களை கவனத்தில் கொள்ளுங்கள். மாநாட்டின் நாட்களில் சில துறைகள் தமது கண்காட்சிகளை அமைத்துள்ளன. இவ்வாறு வரலாற்றுத்துறை மற்றும் ரிவியூ ஆஃப் ரிலீஜியன் துறையும் திருக்குர்ஆனின் பிரதிகள் மற்றும் ஈஸா (அலை) அவர்களது கஃபன் சம்பந்தமாக ஆதாரங்களைக் கண்காட்சியாக வைத்துள்ளது. சென்ற வருடம் செய்யப்பட்டது போன்று இவ்வருடம் அதனை விட சற்று நல்லதாக இருக்கலாம். இந்த இரண்டும் அதனதன் வட்டத்தில் பொது அறிவு கண்காட்சிகளாகும். ஆண்கள், பெண்களுக்கு என்று நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயனடைய முயற்சி செய்யுங்கள். பிறகு மீண்டும் கூறுகிறேன். குறிப்பாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இந்நாட்களில் தொழுகைகள், நஃபில்கள் தவிர இறைவனை நினைவு கூர்வதிலும், ஸலவாத் ஓதுவதிலும், பிற துஆக்களைச் செய்வதிலும் நேரத்தை செலவிடுங்கள்.

அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்கு உரியதாக ஆக்குவானாக! நமது அனைவரின் துஆவையும் ஒப்புக் கொள்வானாக! ஒவ்வொரு விஷமத்திலிருந்தும் பாதுகாப்பானாக!

★ ★ ★ ★ ★

**சுவீடன் மனிதர்களுக்கு தொண்டு புரிவதை தமது நல்லொழுக்கக் கடமையாகக் கருதியவாறு அடைக்கலம் தேடி வந்த இவர்களை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, அவர்கள் தொண்டு செய்கின்ற அன்பான உணர்வுடன் வருபவர்களை வரவேற்க வேண்டும். நான் மீண்டும் கூறுவேன். இடம்பெயர்ந்து வந்துள்ள இவர்களுக்கு அவர்கள் உங்களது சமுதாயத்துடன் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும் என்பதன் பக்கம் நீங்கள் மிகவும் அதிகமாக கவனமூட்டுங்கள்.**

**இஸ்லாமிய போதனைகளைப் பொருத்த வரையில் இஸ்லாம் எல்லாருக்கும் அமைதி, சாந்தி மற்றும் அன்பின் மார்க்கமாக இருக்கின்றது என்பதை மீண்டும் உங்களுக்கு நான் உறுதியாக கூறிக் கொள்கின்றேன். முஸ்லிம்கள் தமது நாட்டின் மீது அன்பு கொள்ள வேண்டும். தமது நாட்டிற்கு நன்றியுணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாட்டின் சட்டங்களைப் பேணுபவர்களாக இருக்க வேண்டும் என்பதையே இஸ்லாம் அவர்களிடம் எதிர்பார்க்கின்றது.**

***சுவீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் 17 மே 2016 -ல் நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய எழுச்சியூட்டும் சொற்பொழிவின் தொடர்ச்சி...***

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் அரசாங்கத்திற்கும் செயல் திட்டத்தை வகுப்பவர்களுக்கும் இந்த ஆலோசனையையே வழங்குவேன். அதாவது, உள்ளூர் மக்களின் உரிமைகள் எவ்வகையிலும் புறக்கணிக்கப்பட்டு விடக் கூடாது என்பதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் அல்லது அவர்கள் மீது எவ்வகையிலான தீய தாக்கமும் ஏற்பட்டு விடக் கூடாது. இது ஓர் உணர்வுப்பூர்வமான விவகாரமாகும். இதனை மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும் கவனத்துடனும் பார்க்க வேண்டும். ஏனென்றால் உள்ளூர்வாசிகள் மத்தியில் இடம் பெயர்ந்து வந்தவர்கள் மீது விருப்பமின்மை உருவாகிவிட்டால் அதன் மூலமாக அபாயகரமான எதிர்நடவடிக்கையின் தொடர் தொடங்கி விடும். உள்ளூரிலுள்ள குடிமக்கள் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு எதிராக இருப்பர். அதன் காரணமாக ஒருவேளை இடம்பெயர்ந்து வந்தவர்கள் சமுதாயத்திலிருந்து துண்டிக்கப்பட்டு தனிமையாக விடப்படுவர். இந்த தனிமை உணர்வின் காரணமாக இடம்பெயர்ந்து வந்தவர்களில் சிலர் தீவிரவாதிகளின் கைகளில் சிக்கி தீவிரவாதத்திற்கு இரையாகி விடலாம். இவ்வாறு ஒரு ஷய்த்தானிய சுழற்சி தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றது. அதன் மூலமாக இந்த சமுதாயத்தின் அமைதி மற்றும் நிம்மதி அழிந்து விடும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அத்தகைய தீவிரவாதிகள் சிலரை மட்டுமாவது தீவிரவாதிகளாக ஆக்குவதில் வெற்றி பெற்று விட்டால் பிறகு இது அந்த சமுதாயத்தின் செழிப்பான நிலை, பாதுகாப்பு மற்றும் சாந்திக்கு மிகப்பெரும் அபாயமாக ஆகி விடும். எனவே, நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு சமநிலையை நிலைபெறச் செய்து மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல் -பட்டவாறு தீவிரவாதத்தைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் எங்கு இந்த இடம்பெயர்ந்து வந்தவர்களை குடியமர்த்துவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றதோ அங்கு இடம்பெயர்ந்து வந்த இவர்கள் விரைவாக தத்தமது கால்களில் உறுதியாக நிற்க வேண்டும். இந்த சமுதாயத்தின் வெற்றிக்காக தங்களது பங்கையும் செலுத்த வேண்டும் என்பதை அவர்களிடம் தெளிவாகக் கூற வேண்டும். மறுபுறம் உள்ளூர் குடிமக்கள் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது சுவீடன் மனிதர்களுக்கு தொண்டு செய்வதை தமது நல்லொழுக்கக் கடமையாகக் கருதியவாறு அடைக்கலம் தேடி வந்த இவர்களை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, அவர்கள் தொண்டு செய்கின்ற அன்பான உணர்வுடன் வருபவர்களை வரவேற்க வேண்டும். நான் மீண்டும் கூறுகிறேன். இடம்பெயர்ந்து வந்துள்ள இவர்களுக்கு அவர்கள் உங்கள் சமுதாயத்துடன் ஒன்று சேர்ந்து இருக்க வேண்டும் என்பதன் பக்கம் நீங்கள் மிகவும் அதிகமாக கவனமூட்டுங்கள். அவ்வாறு செய்யாமல் இருந்தால், நிலைமைகள் உங்கள் கட்டுப்பாட்டை மீறி வெளியில் சென்று விடும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இஸ்லாமிய போதனைகளைப் பொருத்த வரையில் இஸ்லாம் எல்லாருக்கும் அமைதி, சாந்தி மற்றும் அன்பின் மார்க்கமாக இருக்கின்றது என்பதை மீண்டும் ஒருமுறை நான் உங்களுக்கு உறுதியாகக் கூற விரும்புகின்றேன். முஸ்லிம்கள் தமது நாட்டின் மீது அன்பு கொள்ள வேண்டும். தமது நாட்டிற்கு நன்றியுணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாட்டின் சட்டங்களைப் பேணுபவர்களாக இருக்க வேண்டும் என்பதையே இஸ்லாம் அவர்களிடம் எதிர்பார்க்கின்றது. இங்குள்ள முஸ்லிம் தலைவர்களும் மேற்கத்திய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்ற எல்லாருக்கும் இதே தூதுச் செய்தியை வழங்க வேண்டும். இந்த நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்வது அவர்களது கட்டாயக் கடமையாக இருக்கின்றது என்று அந்த மக்களிடம் கூற வேண்டும். இந்த மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு கிடைத்திருக்கின்றது. மேலும் அவர்களது குழந்தைகளுக்கு போர் அல்லது குழப்பம் எதுவுமில்லாத அத்தகைய ஒரு நாட்டில் வளர்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். எனவே, இந்த புதிய வீட்டிற்கு மதிப்பளிப்பதும் அதை கருத்தில் கொள்வதும் அவர்களது கடமையாகும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

மேலும் இந்தக் கருத்தை விளக்கியவாறு நான் உங்கள் முன்னால் சில இஸ்லாமிய போதனைகளை எடுத்துக் கூறுவேன். இந்த போதனைகள் உள்ளூர் அளவில் சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டு -வதில் பெரும் பங்கு வகிக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

திருக்குர்ஆனில் அல்மாயிதா என்ற அதிகாரத்தின் 9 -வது வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (5:9)

இந்த வசனத்தின் சொற்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு அவர்கள் தங்கள் பகைவர்களுக்கு எதிராகக் கூட காழ்ப்புணர்ச்சியும் வெறுப்பும் கொள்ளக் கூடாது. அவர்களை பழிவாங்கக் கூடாது என்று கட்டளையிடப் -பட்டிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், நிலைமைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவர்கள் எப்போதும் ஒவ்வொரு விவகாரத்திலும் நீதியில் நிலைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. பாருங்கள்! சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்குஇது எந்த அளவு அழகான போதனையாக இருக்கின்றது. இஸ்லாம் முஸ்லிம்களிடம் மட்டும் நீதியில் நிலைத்திருக்குமாறு வலியுறுத்திக் கூறவில்லை. மாறாக, நீதி எதிர்பார்க்கின்ற அந்த அளவுகோலையும் தரத்தையும் கூட அது எடுத்துக் கூறுகிறது.

திருக்குர்ஆனின் அந்நிஸா என்ற அதிகாரத்தின் 136 -வது வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாய் இருங்கள். (4:136)

எனவே, உண்மை மற்றும் நீதியில் நிலைத்து நிற்பதற்காக தனக்கு எதிராகவும் தனது பெற்றோர் அல்லது தமக்கு நெருக்கமானவர்களுக்கு எதிராகக் கூட சாட்சி கூறுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை இஸ்லாம் ஒரு முஸ்லிமுக்கு கற்றுத் தருகின்றது. நிச்சயமாக இதை விட சிறந்த நீதியின் அளவுகோல் இருக்க முடியாது. எனவே, இந்த போதனைகள் உலகில் நீதியை நிலைநாட்டுகின்ற வழியாக இருக்கின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

திருக்குர்ஆனில் அல் ஹுஜுராத் என்ற அதிகாரத்தின் 10 -வது வசனத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காக இன்னொரு பொன்னான வழிமுறை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அதில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான். அதாவது, சமுதாயங்கள் அல்லது பிரிவுகள் பரஸ்பரம் தங்களுக்கிடையில் சண்டையிட்டால் ஏனைய பிரிவுகள் ஒன்று சேர்ந்து இந்த சண்டையை நிறுத்துவதற்கான அமைதி நிறைந்த தீர்வைத் தேட வேண்டும். அமைதி நிறைந்த தீர்வு சாத்தியமற்றதாக இருந்தால் பிறகு அநீதி, கொடுமை மற்றும் அநியாயங்களைத் தடுக்கின்ற முயற்சியில் எல்லா சமுதாயங்களும் தோளோடு தோள் சேர்த்துக் கொண்டு ஒருவர் மற்றவருடன் இணைந்து நின்று செயல்பட வேண்டும்.

உலகம் இந்த வழிமுறையின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டால் பிறகு மனித இனத்திற்கு வரவிருக்கின்ற போரின் பிடியிலிருந்து இப்போதும் கூட நாம் தப்பிக்க முடியும்.

திருக்குர்ஆனில் இன்னொரு முக்கியமான இஸ்லாத்தின் வழிமுறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது, "எவர்கள் தங்களிடம் நம்பி ஒப்படைக்கப் -பட்டவற்றையும் கருத்தில் கொள்கின்றனரோ அவர்களே உண்மையான முஸ்லிம்கள் ஆவர்" என்று அதில் கூறப்பட்டிருக்கின்றது. எனது பார்வையில் இந்த வழிமுறை முஸ்லிம்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக, எல்லா நாடுகளுக்கும் சமுதாயங்களுக்கும் உரிய ஓர் உலகளாவிய வழிமுறையாக அது இருக்கின்றது. உலகளாவிய துறைகளிடம் அமானிதங்கள் நம்பி ஒப்படைக்கப்

-பட்டிருக்கின்றன. அவற்றின் தலைவர்கள் நேர்மை, உண்மை மற்றும் நீதியில் நிலைத்து நின்றவாறு அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றிற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும். முஸ்லிம்கள் தமது மார்க்கத்தின் உண்மையான போதனை -களுக்கேற்ப செயல்பட்டிருந்தால் பிறகு அவர்களது நாடுகளில் எந்தவொரு உள்நாட்டுப் போரும் மோதலும் ஏற்பட்டிருக்காது. இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தைப் பார்க்க விரும்பினால் பிறகு நாம் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது நேர்வழி பெற்ற கலீ∴பாக்களின் காலக்கட்டங்களைப் பார்க்க வேண்டும். அவர்கள் நிலைநாட்டியுள்ள உயர்வான நல்லுதாரணங்கள் இஸ்லாம் அமைதி மற்றும் நிம்மதிக்கான ஒரு தீபமாகும் என்பதை நிரூபிக்கின்றது. அது உலகளாவிய மார்க்கச் சுதந்திரம் மற்றும் பன்மை நிலைக்கு உத்திரவாதம் தருகின்றது.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இந்தக் குறுகிய நேரத்தில் நான் சில உதாரணங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். அதிலிருந்தும் ஊடகங்களில் எதைப் பற்றி படித்தீர்களோ அல்லது கேட்டீர்களோ அது இஸ்லாம் அல்ல என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆன் தீவிரவாதத்தையும் கடுமை காட்டுவதையும் பரப்புகின்ற ஒரு வேதமல்ல. நவூதுபில்லாஹ். மாறாக, இவை அன்பு, அனுதாபம் மற்றும் மனிதத்தன்மை பற்றிய போதனைகளாகும். முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தின் உண்மையான போதனைகளுக்கேற்ப செயல்பட்டிருந்தால் பிறகு அவர்களது நாடுகளில் எந்தவொரு உள்நாட்டுப் போரும் மோதலும் ஏற்பட்டிருக்காது. மேலும் அவர்களது பிரச்சனைகள் மற்ற நாடுகள் வரை சென்று சேர்ந்திருக்காது.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை நாம் பார்க்க விரும்பினால் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களது நேர்வழி பெற்ற கலீ∴பாக்களின் காலக்கட்டங்களைப் பார்க்க வேண்டும். அவர்கள் நிலைநாட்டியிருந்த உயர்வான உதாரணங்கள் இஸ்லாம் அமைதி மற்றும் நீதிக்கான ஒரு தீபமாகும். அது உலகளாவிய மார்க்கச் சுதந்திரம் மற்றும் பன்மை நிலைக்கான உத்திரவாதத்தைத் தருகின்றது என்பதை நிரூபிக்கின்றது. உதாரணமாக, இஸ்லாத்தின் இரண்டாவது கலீ∴பாவான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இஸ்லாம் சிரியா வரை பரவியது. அங்கு ஒரு முஸ்லிம் அரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. ஆனால், ரோமானியர்களின் தாக்குதல்களின் காரணமாக முஸ்லிம்களுக்கு வேறு வழியில்லாமல் நாட்டை விட்டு விட்டுச் செல்ல வேண்டியது வந்தது. வரலாறு இந்த உண்மைக்கு சாட்சியாக இருக்கின்றது. முஸ்லிம்கள் சிரியாவை விட்டு வெளியேறியபோது அங்கிருந்த கிறித்தவ குடிமக்களின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவர்கள் முஸ்லிம்கள் திரும்பி தமது நாட்டிற்கு வர வேண்டும் என்று மிகவும் உருக்கமாக துஆக்கள் செய்ய ஆரம்பித்தனர். ஏனென்றால், முஸ்லிம் அரசாங்கம் எப்போதும் அவர்களது உரிமையை எவ்வாறு பாதுகாத்தது என்பதை அவர்கள் பார்த்து விட்டனர். தற்காலத்தில் முஸ்லிம் அரசாங்கங்களும் முஸ்லிம் தலைவர்களும் தங்களது மார்க்கத்தின் உண்மையான போதனைகளை மறந்து விட்டனர் என்பது மிகவும் துக்கமான வேதனையான விஷயமாகும். அவர்களுக்கு தமது ஆற்றல், சுய பலன்கள் மற்றும் தமது பதவியைப் பற்றிய கவலை இருக்கின்றது. இவர்களது கொடுமைகள் மற்றும் அநீதிகளின் காரணமாக உள்ளூர் மக்களிடையே அவநம்பிக்கையும் நிம்மதியின்மையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. கடுமை காட்டுகின்ற தீவிரவாத அமைப்புகள் அதிலிருந்து முழுமையாகப் பயனடைந்து கொண்டிருக்கின்றது.

ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்: எந்நிலையிலும் இந்தக் கடினமான காலக்கட்டத்தில் வல்லரசுகளும் உலகளாவிய துறைகளும் எல்லா நேரத்திலும் நீதியுடன் நடந்து கொள்வது அவர்களது பொறுப்பாகும். எங்கெல்லாம் சண்டைகள் உருவாகின்றனவோ அங்கு ஐக்கிய நாட்டு சபை போன்ற உலகளாவிய அமைப்புகள் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ளாமல் அனைவருடனும் சமமாக நடந்து கொள்கின்ற தன்மையை வெளிப்படுத்த வேண்டும். மேலும் அவற்றின் நோக்கம் முழுக்க முழுக்க அமைதியை நிலைநாட்டுவது மற்றும் எல்லாப் பிரிவுகளுக்கும் இடையில் அமைதியை ஏற்படுத்துவதாக மட்டுமே இருக்க வேண்டும். நாடுகளும் சில பிரிவுகளும் கடந்த காலத்தில் நீதியுடன் நடந்திருந்தால் இன்று நமக்கு தென்படுகின்ற உறுதியற்ற நிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது. மேலும் இன்று நமக்கு அகதிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்பதே உண்மையாகும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பிறகு திருக்குர்ஆனின் அல்மு∴மினூன் என்ற அதிகாரத்தின் 9-வது வசனத்தில் இன்னொரு முக்கியமான இஸ்லாத்தின் வழிமுறை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதில், “எவர்கள் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றையும் தமது உடன்படிக்கை களையும் கருத்தில் கொள்கின்றரோ அவர்களே உண்மையான முஸ்லிம்கள் ஆவர் என்று வருகின்றது. அதாவது என்ன பொறுப்புகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை நிறைவேற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். எனது பார்வையில் இந்த வழிமுறை முஸ்லிம்களுக்கு மட்டும் கூறப்பட்டதல்ல. மாறாக, எல்லா நாடுகளுக்கும் சமுதாயங்களுக்கும் பொருந்துகின்றது. உலகளாவிய ஒரு வழிமுறையாக இது இருக்கின்றது. அனைத்து அரசாங்கங்களிடமும் உலகளாவிய துறைகளிடமும் அமானிதங்கள் உள்ளன. நேர்மையுடனும், உண்மையுடனும் நீதியில் நிலைத்திருந்தவாறு தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அவற்றிற்குரிய உரிமையை செலுத்துவது அவற்றின் தலைவர்களது கடமையாக இருக்கின்றது. பொதுமக்களுக்கு தொண்டு செய்வதும் சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதும் அரசாங்கங்கள் மற்றும் அரசியல் -வாதிகளின் பொறுப்பாக இருக்கின்றது. இந்தப் பொறுப்பை சாதாரணமானதாகக் கருதி விடாதீர்கள். இவ்வாறே ஐக்கிய நாட்டு சபையின் செயல் திட்டத்தில் வருங்கால தலைமுறையை போரின் துன்பத்திலிருந்து பாதுகாப்பது, ஒருவர் மற்றவருடன் இணைந்து அமைதியாக வாழ்வது உலகளாவிய அமைதியை நிலைநாட்டுவது ஆகியவை அந்த அமைப்பின் அடிப்படை நோக்கங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. எந்த தவறுகளின் காரணமாக இருபதாவது நூற்றாண்டில் இரண்டு உலகப் போர்கள் நிகழ்ந்துள்ளனவோ அவற்றிலிருந்து மனித இனத்தைப் பாதுகாப்பது இந்த அமைப்பின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக இருக்கின்றது என்பதை ஐக்கிய நாட்டு சபையின் செயல் திட்டம் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறுகின்றது. எனவே, இந்த பொறுப்பை கண் முன் நிறுத்தியவாறு ஐக்கிய நாட்டு சபை தமது உயர்வான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உலக அமைதியின் முக்கியத்துவத்தைப் புரிந்தவாறு எல்லாவற்றையும் விட இதனை இந்தக் காலக்கட்டத்தின் மிக முக்கியமான பிரச்சனையாக கருத வேண்டும். ஆனால், இந்த பொறுப்பு புறக்கணிக்கப்படுகின்றது என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நான் மீண்டும் கூறுகின்றேன். எல்லா பிரிவினரும் தமது பொறுப்புகளைப் புரிய வேண்டும். நீதியுடன் நடந்து கொண்டவாறு ஒருவர் மற்றவரது உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் இப்போது கூட நமது தலைமேல் இருந்து கொண்டிருக்கின்ற போரின் கருமேகங்கள் விலகிச் சென்று விடலாம்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எனவே, நான் மீண்டும் உலகின் வல்லரசுகளிடம் கூறிக் கொள்கின்றேன். அவை உளப்பூர்வமாகவும் கலப்பற்ற தன்மையுடனும் உலகின் அமைதிக்காக முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் உலகில் உள்ளவர்களுக்கு ஞானத்தை வழங்குவானாக! மேலும் மனித இனத்தின் விரிவான பலனுக்காக சுய நலன்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விடுவதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக! நாம் அவ்வாறு செய்வதில் தோல்வி அடைந்து விட்டால் பிறகு ஏற்கனவே நான் பல சந்தர்ப்பங்களில் கூறியிருப்பது போன்று உலகம் இப்போது மாபெரும் மூன்றாவது உலகப் போரின் பக்கம் விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. அதன் தாக்கங்கள் வரக்கூடிய பல துறைமுறைகள் வரை நீடித்துக் கொண்டிருக்கும். ஏனென்றால், பல சமுதாயங்களிடம் அணு ஆயுதங்கள் இருக்கின்றன. மேலும் இந்தப் போரின் விளைவுகளும் நமது எண்ணத்திற்கும் யூகத்திற்கும் அப்பாற்பட்டதாகவே இருக்கும். நாம் நமது பிள்ளைகளுக்காகவும் வருங்கால தலைமுறைக்காகவும் சிறந்த உலகை விட்டு விட்டுச் செல்ல விரும்புகின்றோமா என்ன? அல்லது நாம் அவர்களுக்காக போர், சண்டை, கொலை, இரத்தம் சிந்துதல் ஆகியவற்றால் நிறைந்திருக்கின்ற, வார்த்தைகளால் விவரிக்க முடியாத துக்கத்திற்கும் வேதனைக்கும் அவர்களை வாரிசாக்கி விட்டுச் செல்ல விரும்புகின்றோமா? என்ற கேள்வியை நாம் நம்மிடமே கேட்க வேண்டும்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ் மனிதத் தன்மையை பாதுகாப்பானாக! நம் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக! எல்லா மக்களுக்கும் மற்றவர்களுடன் நீதியுடனும் ஞானத்துடனும் நல்லெண்ணத்துடனும் நடந்து கொள்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! அதன் மூலமாக நாம் நமது பிள்ளைகளையும் வருங்கால சந்ததிகளையும் பாதுகாக்கும் தகுதியை உடையவர்களாக ஆகவேண்டும். இந்த சொற்களுடன் நான் உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன். ஆனால் அதற்கு முன்னதாக மீண்டும் ஒருமுறை எங்களது அழைப்பை ஏற்றுக் கொண்டதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் அருள் புரிவானாக! மிகவும் நன்றி.

சொற்பொழிவின் இறுதியில் ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆ செய்தார்கள். துஆவில் வந்திருந்த அனைவரும் தத்தமது வழிமுறைக்கேற்ப கலந்து கொண்டனர்.

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**Vol. 1** **Thursday 15 SEPTEMBER 2016** **Issue No. 28** **ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

இருப்பார் என்பது யூதர்களின் கொள்கையாகும். கிறித்தவர்கள் ஒரு மஸீஹையே ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், முதலில் தோன்றிய அதே மஸீஹிப்னு மர்யம் (மர்யமின் மகன் ஈஸா) தனது இரண்டாவது வருகையின் போது மிகவும் ஆற்றலுடனும் கம்பிரத்துடனும் தோன்றுவார். உலகிலுள்ள பிரிவுகள் தொடர்பாக தீர்ப்பு கூறுவார் என்று கூறுகின்றனர். மேலும், எந்த அளவு கம்பீரத்துடன் அவர் தோன்றுவார் என்றால் அவரது முதலாவது வருகையுடன் அதற்கு எந்தத் தொடர்பும் இருக்காது என்று அவர்கள் கூறுகின்றனர்.

எந்நிலையிலும் இந்த இரண்டு பிரிவினருமே இறுதிக் காலத்தில் வர வேண்டிய மஸீஹ் தனது கம்பீரத்திலும் வலுவான அடையாளங்களின் அடிப்படையிலும் முதலாவது மஸீஹ் அல்லது மஸீஹின் முதலாவது வருகையை விட சிறந்து விளங்குவார் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இஸ்லாமும் இறுதியில் தோன்றும் மஸீஹிற்கு ஹகம் (நெறிநீதி தீர்ப்பவர்) என்று பெயர் வைத்துள்ளது. அவர் உலகிலுள்ள எல்லா மதங்களையும் பற்றி தீர்ப்பு கூறுபவர் ஆவார் என்றும் தனது மூச்சுக் காற்றினால் மட்டும் நிராகரிப்பவர்களைக் கொலை செய்பவராக அவர் இருப்பார் என்றும் அவரைப் பற்றி அது கூறுகின்றது. இறைவன் அவருடன் இருப்பான். அவரது கவனமும் துஆவும் மின்னலைப் போன்று தனது பணியைச் செய்யும். அவர் எவ்வாறு அத்தாட்சியை நிறைவடையச் செய்வார் என்றால் ஒரு வகையில் (சான்றுகள் மூலமாக) அனைவரையும் அழித்து விடுவார் என்பதே இதன் பொருளாகும். முதலாவது மஸீஹ் வர வேண்டிய மஸீஹை விட சிறந்தவராவார் என்ற விஷயத்தை வேதத்தை உடையவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. யூதர்கள் முதலில் வந்தவரை மஸீஹ் என்று கூறும் அதே வேளையில் இறுதியில் தோன்றும் மஸீஹை மிகவும் சிறப்பிற்குரியவர் என்று கருதுகின்றனர். எந்த மக்கள் தவறான எண்ணத்தின் காரணமாக ஒரு மஸீஹை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனரோ அவர்களும் கூட அவரது இரண்டாவது வருகை மிகவும் கம்பீரமிக்க வருகையாக இருக்கும் என்று கூறுகின்றனர். இதற்கு எதிரில் அவரது முதலாவது வருகையை ஒரு பொருட்டாகவே அவர்கள் கருதுவதில்லை. பிறகு இறைவனும் அவனது தூதரும் அனைத்து நபிமார்களும் இறுதிக் காலத்தில் தோன்றும் மஸீஹை அவரது பணிகளின் காரணமாக சிறந்தவராக ஆக்கியிருக்கும்போது நீங்கள் ஏன் மர்யமின் மகன் ஈஸாவை விட உங்களை சிறந்தவராகக் கருதுகின்றீர்கள் என்று கேட்பது ஷய்த்தான் ஏற்படுத்தும் சந்தேகங்களாகும்.

அன்பர்களே ! மர்யமின் மகன் ஈஸா இறந்து விட்டார் என்பதை நான் நிரூபித்திருக்கும்போது, மேலும் வர வேண்டிய மஸீஹ் நானாக இருக்கும்போது இந்நிலையில் எந்த நபர் மஸீஹை சிறந்தவராகக் கருதுகின்றாரோ அவர் வர வேண்டிய மஸீயை ஒரு பொருட்டாகவே கருத வேண்டாம். அவரை நபி என்றோ ஹகம் அதாவது தீர்ப்பு கூறுபவர் என்றோ அழைக்க முடியாது. முதலாவது மஸீஹிற்கு தான் எல்லா சிறப்புகளும் உள்ளன என்பதை திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளிலுள்ள ஆதாரங்களிலிருந்து நிரூபித்துக் காட்ட வேண்டும். இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப என்னை அனுப்பி விட்டான். இப்போது இறைவனுடன் சண்டையிடுங்கள். எனினும், நான் நபி மட்டும் அல்ல. மாறாக, ஒரு வகையில் நபியாகவும் இன்னொரு வகையில் உம்மத்தி (இந்த சமுதாயத்தைச் சார்ந்தவன்) ஆகவும் நான் இருக்கின்றேன். அதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய்மைப்படுத்தும் ஆற்றலும் முழுமையான அருளும் நிரூபிக்கப்படுகின்றது.

---

☆ இறைவனது பணிகளின் இறுதி எல்லையை எவராலும் அறிந்து கொள்ள முடியாது. இஸ்ரவேல் சந்ததிகளில் மகத்தான நபியான ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தோன்றினார்கள். அவர்களுக்கு இறைவன் தவ்ராத்தை வழங்கினான். அவர்களது மகத்துவம் மற்றும் அழகின் காரணமாக பல்அம்பாவூர் கூட அவர்களை எதிர்த்து நின்று பாதாளத்தின் அடியில் எறியப்பட்டார். இறைவன் அவரை நாயுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு காட்டுவாசியான ஒரு நபரது ஆன்மீக அறிவுகளுக்கு முன்னால் வெட்கப்பட வேண்டியது வந்தது. அந்த மறைவான இரகசியங்களைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: فَوَجَدَا عَبْدًا مِّنْ عِبَادِنَآ اٰتَيْنٰهُ رَحْمَةً مِّنْ عِنْدِنَا وَعَلَّمْنٰهُ مِنْ لَّدُنَّا عِلْمًا அப்போது அவர்கள் எம் அடியார்களுள் மகத்தான ஓர் அடியாரை (அங்கு) கண்டனர். நாம் அவருக்கு எம்மிடமிருந்து அருளை வழங்கியிருந்தோம். நாம் அவருக்கு எம்மிடமிருந்தே ஞானத்தையும் அளித்திருந்தோம். ***(18:66)***

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 157-159)*

## இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அ. அலீமுல்லாஹ் சாஹிப் அவர்களது மகனான மதிப்பிற்குரிய அ. பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் அவர்கள் 31.03.2016 அன்று மஸ்ஜிது ஃபஸ்ல் பள்ளிவாயிலுக்கு வெளியே காலை 11:00 மணி அளவில் தொழ வைத்தார்கள்

மர்ஹூம் 22 ஜனவரி 2016 ஆம் ஆண்டு தனது 28 –வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மர்ஹூம் பத்தாம் வகுப்பை நிறைவு செய்த பிறகு தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து காதியான் வந்தார்கள். சிறுநீரக நோயின் காரணமாக அவர்களுக்கு தனது சொந்த ஊருக்கு திரும்பிச் செல்ல நேர்ந்தது. ஐவேளை தொழுகையை முறையாக நிறைவேற்றி வந்தார்கள். மேலும், இரவில் நீண்ட நேரம் நவாஃபில் தொழுகையை தொழுது வந்தார்கள். மேலும் வீட்டிலுள்ளவர்களுக்கும் தொழுகையைப் பேணும்படி அறிவுறுத்தி வந்தார்கள்.

எந்த மருத்துவமனையில் அவர்கள் சிகிச்சை பெற்று வந்தார்களோ அங்குள்ள அமைப்பிடம் எடுத்துக் கூறி மருந்துகள் மற்றும் ஊசியை ஏழை மக்களுக்கு பெற்றுத் தருவதில் சிறப்பான ஏற்பாட்டைச் செய்தார்கள். ஏழைகளிடம் அவர்கள் காட்டிய இந்த அனுதாபத்தால் அப்பகுதியில் வசிக்கக்கூடிய மக்கள் அவர்களைப் பற்றி அதிகமாக புகழ்ந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்போடு மிகுந்த பற்றுணர்வு கொண்டவர்களாக விளங்கினார்கள். ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆவை தொடர்ச்சியாக கேட்டு வந்தார்கள். மேலும் கிலாஃபத்தின் ஒவ்வொரு திட்டத்திலும் பங்கு பெற முயற்சி செய்து வந்தார்கள்.

மர்ஹூமின் ஒரு சகோதரர் மதிப்பிற்குரிய அ. கலீல் அஹ்மது சாஹிப் முஅல்லிம் ஆவார்கள். அவர்கள் தற்போது பத்ர் வார தமிழ் பதிப்பின் இன்ஸ்பெக்டராகத் தொண்டு செய்வதற்குரிய நற்பாக்கியத்தைப் பெற்றுள்ளார்கள்.

[அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 15.07.2016]

## 122 –வது காதியான் ஆண்டு மாநாடு [ஆண்டு மாநாடு தொடங்கப்பட்டதிலிருந்து 125 –வது வருடம்]

*ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியான் ஆண்டு மாநாட்டை 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 (திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்) தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் அதற்காக தயாராகத் தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இறைவனுக்காக நடத்தப்படும் இம்மாநாட்டிலிருந்து அருள்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாக நடப்பதற்கும் நல்ல ஆன்மாக்கள் நேர்வழியைப் பெறுவதற்கும் அது காரணமாக இருப்பதற்கும் நீங்கள் தொடர்ந்து துஆ செய்யுங்கள்.*

*(தலைமையக நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத்)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad